بسم الله الرحمن الرحيم

## الذكر بعد الصلاة ( اللغة التاملية)

# தொழுகைக்குப் பின் ஓதும் துஆக்கள்

**ஒவ்வொரு பர்ழான தொழுகைக்குப் பின் பின்வரும் துஆக்களை ஓதுவது சுன்னத்தாகும்.**

أَسْتَغْفِرُ الله  (٣ مرات)

**அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடுகிறேன். (மூன்று தடவை**

اَللَّهُمَّ أَنْتَ السَّلَام وَمِنْكَ السَّلَام تَبارَكْتَ يَا ذَا الجَلَالِ وَالإِكْرَام.

**யா அல்லாஹ் நீ ஈடேற்றமளிப்பவன். உன்னிடமிருந்தே ஈடேற்றம் உண்டாகிறது! கண்ணியமும் மாண்பும் உடையவனே! நீயே அருட்பேருடையவன்.**

لاَ إِلهَ إلّا الله وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، لَهُ المُلْكُ وَلَهُ الحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْر، لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إلاّ بِالله، لاَ إلهَ إلاّ الله وَلاَ نَعْبُدُ إلاّ إِيَّاهُ، لَهُ النِّعْمَةُ وَلَهُ الفَضْـــلُ وَلَهُ الثِّنَاءُ الحَسَنْ، لاَ إلهَ إلاّ الله مُخْلِصِيْـــنَ لَهُ الدِّيْنُ وَلَوْ كَرِهَ الكَافِرُوْن، اللَّهُمَّ لاَ مَانِعَ لِماَ أَعْطَيْتَ وَلاَ مُعْطِيَ لِماَ مَنَعْتَ وَلاَ يَنْفَعُ ذَا الجَدّ مِنْكَ الجَد.

**வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது! புகழ் அனைத்தும் அவனுக்கே உரியது! தீமையில் இருந்து விலகுவதும், நன்மையின் மீது ஆற்றல் பெறுவதும் அல்லாஹ்வின் உதவி கொண்டே தவிர இல்லை. வணக்கத்திற்குரிய அல்லாஹ்வைத் தவிர வேறில்லை. அவன் ஒருவனைத் தவிர வேறு யாரையும் நாம் வணங்க மாட்டோம்!**

அழகிய புகழ் மாலையும் அவனுக்குரியதே! வணக்கத்திற்குரிய இறைவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. கீழ்படிதலை அவனுக்கே உரித்தாக்குகிறோம், நிராகரிப்பாலர்கள் வெறுத்தாலும் சரியே! யா அல்லாஹ்! நீ கொடுத்ததைத் தடுப்பவர் யாருமில்லை, நீ தடுத்ததைக் கொடுப்பவர் யாருமில்லை, செல்வம் உடையவர் எவரையும் அவரது செல்வம் உனது தண்டனையில் இருந்து காத்திட முடியாது.

ويقول بعد صلاة الفجر وصلاة المغرب مع ما تقدم:

மேல் கூறப்பட்டவைகளுடன் பின் வரும் வாக்கியங்களை பஃஜ்ர், மஃரிப் தொழுகைக்குப் பின் பத்து முறை ஓத வேண்டும்.

لاَ إِلهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الحَمْدُ يحْيِ وَيُمِيْتُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْر. (١٠ مرات)

வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே, புகழ் அனைத்தும் அவனுக்குரியதே! உயிர்ப்பிப்பவனும் அவனே மறனிக்கச் செய்பவனும் அவனே! மேலும் அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவன்.

ثم يقول : (سبحان الله ٣٣) ، (الحمد لله ٣٣)، (الله أكبر ٣٣)

பின்பு (சுப்ஹானல்லாஹ் 33 தடவையும்) (அல்ஹம்துலில்லாஹ் 33 தடவையும்) (அல்லாஹு அக்பர் 33 தடவையும்) கூற வேண்டும்.

**அதன் பின் நூராகப் பூரணப்படுத்துவதற்காக பின் வரும் வாக்கியத்தை ஓத வேண்டும்.**

لَا إلهَ إلّا الله وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، لَهُ الملكُ وَلَهُ الحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْر.

**வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே, புகழ் அனைத்தும் அவகுக்குரியதே! மேலும் அவன் அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவன்.**

**பின்பு ஆயதுல் குர்சியை ஓத வேண்டும்.**

{اللّهُ لاَ إِلَهَ إِلاَّ هُوَ الْحَيُّ الْقَيُّومُ لاَ تَأْخُذُهُ سِنَةٌ وَلاَ نَوْمٌ لَّهُ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الأَرْضِ مَن ذَا الَّذِي يَشْفَعُ عِنْدَهُ إِلاَّ بِإِذْنِهِ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ وَلاَ يُحِيطُونَ بِشَيْءٍ مِّنْ عِلْمِهِ إِلاَّ بِمَا شَاء وَسِعَ كُرْسِيُّهُ السَّمَاوَاتِ وَالأَرْضَ وَلاَ يَؤُودُهُ حِفْظُهُمَا وَهُوَ الْعَلِيُّ الْعَظِيمُ} (٢٥٥) سورة البقرة.

**அல்லாஹ் அவனைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு யாருமில்லை,அவன் நித்திய ஜீவன், (பேரண்டம் முழுவதையும்) நன்கு நிர்வகிப்பவன்! அவனை சிற்றுறக்கம் பிடிப்பதில்லை, அவன் தூங்குவதுமில்லை. வானங்கனிலும் பூமியிலும் உள்ள அனைத்தும் அவனுக் குரியனவே! அவனது அனுமதியின்றி யார் பரிந்துரை செய்ய முடியும்? அவர்களுக்கு முன்னாலிருப்பவற்றையும் அவர்களுக்கு பின்னால் இருப்பவற்றையும் அவன் நன்கறிவான். அவன் (அறிவித்துக் கொடுக்க) நாடியதைத் தவிர அவனது ஞானத்திலிருந்து வேறெதையும் எவரும்**

புரிந்து கொள்ள முடியாது! அவனது அரியாசனம் வானங்களையும், பூமியையும் வியாபித்துள்ளது. அவற்றைப் பாதுகாப்பது அவனைச் சோர்வுறச் செய்வதில்லை. மேலும் அவன் மிக உயர்ந்தவனும் மகத்துவம் மிக்கவனுமாய் இருக்கிறான்.

ثم يقرأ: (قل هو الله أحد) و (المعوذتيـــن)، ويكررها بعد صلاتي الفجر والمغرب (٣ مرات).

பின்பு சூரா அல் இக்லாஸ் - சூரா அல் ஃபலக்- சூரா அன்னாஸ் எனும் மூன்று சூராக்களையும் ஃபஜ்ர், மஃரிப் தொழுகைக்குப் பின் மூன்று முறை ஓதிக் கொள்ள வேண்டும்.

## இதுதான் தொழுகைக்குப் பின் ஓத வேண்டிய சிறந்த துஆக்களாகும்.

## தமிழில்: மவ்லவி இம்ரான் கபூர்

## அல்லாஹ் மிக அறிந்தவன்.

المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة
ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH
P.O.BOX 29465 RIYADH 11457 - TEL 4454900 - 4916065
FAX 4970126 - E-Mail:rabwah@www.com